SAKTHI MARKETING
வாடிக்கையாளர்களின் நன் மதிப்பை பெற்ற நிறுவனம்
பெட்ரோல், டீசல், சர்வோ ஆயில் சில்லரை விற்பனை நிலையம்
इंडियनऑयल IndianOil
#41/B, Sabanayagar Street, Chidambaram-1.
Ph: 04144-223177, Cell: 98423 35007


# மாலை எக்ஸ்பிரஸ்

குரோதி வருடம் ஐப்பசி 17 | MAALAI EXPRESS | ஹிஜ்ரி 1446 ரபிஉல் ஆகிர் 30

மாநிலம் பயனுற!


மல்டிகலர் பைகள்
துணிக்கடை, நகைக்கடை, திருமண மற்றும் சுபவிசேஷங்களுக்கு அனைத்து விதமான மாடல்களிலும் சிறந்த முறையில் பைகள் தைத்துதரப்படும்.
தொடர்புக்கு:- 98423 35007

● புதுச்சேரி ● ஞாயிற்றுக்கிழமை, நவம்பர் 3, 2024 ● வெளியூர்: 4-11-2024, திங்கள்கிழமை RNI.REG.NO.PONBIL/2015/68788 ● Volume - 10 ● Issue - 116 ● 4 பக்கம் ● ரூ.6

## இந்த மாதம் இறுதியில்

# தமிழக சட்டசபை கூடுகிறது

## பல்வேறு பிரச்னைகள் குறித்து விவாதங்கள் நடக்க வாய்ப்பு



**சென்னை, நவ. 3-**

தமிழக சட்டசபை கூட்டம் இந்த மாதம் கடைசி வாரம் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. தமிழக சட்டசபையில் கடந்த பிப்ரவரி மாதம் 19 ந்தேதி பட்ஜெட் தாக்கல் செய்து முடித்ததும் அதன் மீதான விவாதம் 4 நாள் நடைபெற்றது.

இதன்பிறகு மானியக் கோரிக்கை மீதான விவாதம் உடனே நடைபெறாமல் பாராளுமன்ற தேர்தலுக்காக தள்ளி வைக்கப்பட்டது. தேர்தல் முடிந்ததும் 2024–25ம் ஆண்டிற்கான மானிய கோரிக்கை மீதான விவாதத்தை நடத்தும் வகையில் கடந்த ஜூன் 20 ந்தேதி தமிழக சட்டசபை மீண்டும் கூடியது.

அப்போது துறை வாரியாக மானிய கோரிக்கை மீதான விவாதங்கள் அடங்கிய கூட்டம் ஜூலை 29ந்தேதி வரை நடந்தது. வழக்கமாக 6 மாதத்திற்கு ஒருமுறை தமிழக சட்டசபை கூட்டம் நடத்தப்பட வேண்டும். அந்த வகையில் டிசம்பர் மாதத்திற்குள் சட்டசபை கூட்டப்பட வேண்டும். சபாநாயகர் அப்பாவு இப்போது ஆஸ்திரேலியா நாட்டின் சிட்னி நகரில் நடைபெற இருக்கும் 67வது காமன்வெல்த் பாராளுமன்ற மாநாட்டில் பங்கேற்க சென்றுள்ளார். அவருடன் சட்டசபை செயலாளர் சீனிவாசன் உடன் சென்றுள்ளார். வருகிற 17ந்தேதி தான் சென்னை திரும்புகின்றனர்.

அதன் பிறகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுடன் கலந்து பேசி சட்டசபை கூடும் தேதியை சபாநாயகர் அறிவிப்பார். அநேகமாக இந்த மாதம் கடைசி வாரம் (நவம்பர்) சட்டசபை கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த கூட்டத்தில் சட்டம்ஒழுங்கு பிரச்சனை, போதை பொருள் நடமாட்டம், மழை வெள்ளம் சேதம், கூட்டணி விசயங்கள் உள்ளிட்ட பல்வேறு பிரச்சனைகள் குறித்து காரசார விவாதங்கள் நடைபெறும்.

2026 தேர்தலில் எந்த கூட்டணி ஜெயிக்கும் என்ற வகையில் அமைச்சர்களின் பேச்சுக்கள் இருக்கும். ஆளும் கட்சிஎதிர்க்கட்சி இடையே அனல் பறக்கும் விவாதங்களுக்கு பஞ்சம் இருக்காது.

## பிரியங்கா காந்தி இன்று வயநாடு வருகை 5 நாட்கள் தேர்தல் பிரசாரம் மேற்கொள்கிறார்



**வயநாடு, நவ. 3-**

வயநாடு நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை ராகுல்காந்தி ராஜினாமா செய்ததால், காலியான அந்த தொகுதிக்கு வருகிற 13ந் தேதி இடைத்தேர்தல் நடக்கிறது. இந்த இடைத்தேர்தலில் காங்கிரஸ் வேட்பாளராக பிரியங்கா காந்தி போட்டியிடுகிறார். இதற்காக அவர் கடந்த மாதம் 23ந் தேதி வேட்புமனு தாக்கல் செய்தார். தொடர்ந்து கடந்த மாதம் 28, 29ந் தேதி என 2 நாட்கள் பிரியங்கா தேர்தல் பிரசாரம் செய்தார்.

இந்த நிலையில் வயநாடு நாடாளுமன்ற தொகுதியில் தேர்தல் பிரசாரம் செய்வதற்காக பிரியங்கா காந்தி இன்று (ஞாயிற்றுக்கிழமை) வயநாடு வருகிறார். அவருடன் மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தியும் வருகிறார். இன்று முதல் வருகிற 7ந் தேதி வரை 5 நாட்கள் வயநாடு நாடாளுமன்ற தொகுதிக்கு உட்பட்ட 7 சட்டமன்ற தொகுதிகளில் நடைபெறும் தேர்தல் பிரசார பொதுக்கூட்டத்தில் பிரியங்கா கலந்துகொண்டு பேசுகிறார்.

## பள்ளிகளில் கலைத்திருவிழா போட்டிகள்: வழிகாட்டுதல்கள் வெளியீடு

**சென்னை, நவ. 3-**

ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி மாநில திட்ட இயக்குனர் ஆர்த்தி, அனைத்து மாவட்ட முதன்மை கல்வி அலுவலர்களுக்கும் அனுப்பியுள்ள சுற்றிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

தமிழகத்தில் 2024–25ம் கல்வியாண்டில் ஒன்றாம் வகுப்பு முதல் பிளஸ்2 வரை படிக்கும் மாணவர்களுக்கு வட்டார அளவிலான கலைத்திருவிழா போட்டிகள் வருகிற 7ந்தேதி நடத்த வேண்டும். வெற்றி பெற்ற மாணவர்களின் விவரங்களை ‘எமிஸ்’ தளத்தில் வருகிற 8ந்தேதி உள்ளீடு செய்ய வேண்டும். வட்டார அளவில் ஒவ்வொரு போட்டியிலும் முதலிடம் பெற்ற வெற்றியாளர்களை கொண்டு வருகிற 11ந்தேதி முதல் 20ந்தேதி வரை மாவட்ட அளவிலான போட்டிகளை நடத்த வேண்டும். இதில், முதல் 3 வெற்றியாளர்களின் விவரங்களை எமிஸ் தளத்தில் வருகிற 21ந்தேதி உள்ளீடு செய்ய வேண்டும். மாவட்ட அளவிலான போட்டியில் ஒவ்வொரு போட்டியிலும் முதலிடம் பெறும் வெற்றியாளர்கள் மட்டுமே மாநில அளவிலான போட்டியில் பங்கு பெற வேண்டும்.

மாவட்ட அளவிலான போட்டிகளை அரசு பள்ளிகளுக்கு தனியாகவும், அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு தனியாகவும் திட்டமிட்டு நடத்திட வேண்டும். மாவட்ட அளவிலான போட்டிகளுக்கு மாணவ, மாணவிகளை அழைத்து செல்லும்போது, ஒரு ஆண் ஆசிரியர், ஒரு பெண் ஆசிரியர் இருக்க வேண்டும். வட்டார அளவிலான போட்டிக்கு ஒரு வட்டத்திற்கு ரூ.25 ஆயிரமும், மாவட்ட அளவிலான போட்டிக்கு ரூ.1 லட்சமும் நிதி விடுவிக்கப்படும். உரிய வழிகாட்டுதல்களை பின்பற்றி, மாவட்ட அளவிலான கலைத்திருவிழா போட்டிகளை முதன்மை கல்வி அலுவலர்கள் நடத்தவேண்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## தாம்பரம்-காட்டாங்கொளத்தூர் இடையே நாளை சிறப்பு மின்சார ரெயில்கள் இயக்கம்



**சென்னை, நவ. 3-**

தெற்கு ரெயில்வே சென்னை கோட்டம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது:

தீபாவளி பண்டிகையை கொண்டாட சொந்த ஊர்களுக்கு சென்று விட்டு சென்னை திரும்பும் பயணிகளின் வசதிக்காக சிறப்பு மின்சார ரெயில்கள் இயக்கப்படுகிறது.

அதன்படி, காட்டாங்கொளத்தூரில் இருந்து நாளை (திங்கட்கிழமை) அதிகாலை 4, 4.30, 5, 5.45, 6.20 ஆகிய நேரங்களில் தாம்பரத்திற்கு சிறப்பு மின்சார ரெயில்கள் இயக்கப்படுகிறது. இந்த ரெயில் பொத்தேரி, கூடுவாஞ்சேரி, ஊரப்பாக்கம், வண்டலூர் ஆகிய ரெயில் நிலையங்களில் நின்று செல்லும்.

அதே போல, தாம்பரத்தில் இருந்து அதிகாலை 5.05 மணி மற்றும் 5.40 மணிக்கு காட்டாங்கொளத்துருக்கு 2 சிறப்பு மின்சார ரெயில்கள் இயக்கப்படுகிறது. இவ்வாறு அதில் தெரிவித்துள்ளது.

## சென்னை விமான நிலையத்திற்கு மீண்டும் வெடிகுண்டு மிரட்டல்: விடிய, விடிய சோதனை

**ஆலந்தூர், நவ. 3-**

சென்னை விமான நிலைய இயக்குனர் அலுவலகத்தில் உள்ள இணையதளத்திற்கு நேற்று நள்ளிரவு இமெயிலில் தகவல் வந்தது. அதில் சென்னை விமான நிலையத்தில் சக்தி வாய்ந்த வெடிகுண்டுகள் வைக்கப்பட்டுள்ளன. விமான நிலையத்தை பாதுகாத்துக் கொள்ளுங்கள் என்று குறிப்பிடப்பட்டு இருந்தது.

இமெயில் மிரட்டலில் குறிப்பிட்ட விமானத்திற்கோ அல்லது விமான நிலையத்தில் குறிப்பிட்ட பகுதிக்கு என்றோ குறிப்பிடாமல் இருந்ததால் விமான நிலையம் மற்றும் விமான நிலைய வளாகப் பகுதிகள் அனைத்திலும் பாதுகாப்பு அதிகாரிகள் சோதனையிட்டனர்.

விமானங்களை நிறுத்தி வைக்கும் பகுதி, ஓடுபாதை, விமானங்களுக்கு எரிபொருள் நிரப்பும் இடம், பயணிகள் புறப்பாடு, சரக்கு பார்சல்களை விமானங்களில் ஏற்றும் பகுதி ஆகிய இடங்களில் இன்று காலை வரை விடிய,விடிய சோதனை நடைபெற்றது. ஆனால் வெடிகுண்டுகள் எதுவும் இல்லை. வெடிகுண்டு மிரட்டல் புரளி என்பது தெரிந்தது.

இதுகுறித்து, சென்னை விமான நிலைய போலீசார் வழக்கு பதிவு செய்து வெடிகுண்டு மிரட்டல் வந்த இமெயில் முகவரியை வைத்து விசாரணை நடத்தி வருகிறார்கள். சென்னை விமான நிலையத்தில் கடந்த 3 நாட்கள் வெடிகுண்டு புரளிகள் இல்லாத நிலையில் மீண்டும் மிரட்டல் வரத்தொடங்கி உள்ளது.

## இதுவரை இல்லாத அளவில் பயணம்: தீபாவளி சிறப்பு பஸ்கள் முன்பதிவில் புதிய சாதனை

**சென்னை, நவ. 3-**

தீபாவளி பண்டிகை முடிந்து பொதுமக்கள் சென்னை திரும்புவதற்காக 12,846 பஸ்கள் இன்று முதல் இயக்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் தீபாவளி பண்டிகையையொட்டி லட்சக்கணக்கான மக்கள் அவரவர் சொந்த ஊர்களுக்கு சென்றிருந்தனர். இதையொட்டி தமிழக அரசு போக்குவரத்து துறை 28ந்தேதியில் இருந்து 30ந்தேதி வரை சிறப்பு பஸ்களை இயக்கியது. சிறப்பு பஸ்கள் மூலம் 5.76 லட்சம் பேர் பயணம் செய்து இருந்தனர்.

இந்த நிலையில் தீபாவளி பண்டிகையை முடித்து விட்டு இன்று முதல் அவரவர் ஊர்களில் இருந்து லட்சக்கணக்கான மக்கள் புறப்பட்டு சென்னைக்கு திரும்புவார்கள்.

இதனை கருத்தில் கொண்டு 12,846 சிறப்பு பஸ்கள் இயக்கப்பட உள்ளது. குறிப்பாக பல்வேறு நகரங்களில் இருந்து இந்த பஸ்கள் சென்னைக்கு வர உள்ளன.

இந்த சிறப்பு பஸ்களில் பயணம் செய்ய இன்று ஒரே நாளில் 75 ஆயிரத்துக்கும் அதிகமான பயணிகள் முன்பதிவு செய்துள்ளதாக போக்குவரத்து துறை செயலாளர் பணீந்திர ரெட்டி தனது சமூக வலைதள பதிவில் தெரிவித்துள்ளார். பயணிகள் கடைசி நேர கூட்ட நெரிசலில் பயணிப்பதை தவிர்த்து தங்கள் பயணத்தை முன்கூட்டியே திட்டமிட்டு tnstc.in அல்லது TNSTC அதிகாரப்பூர்வ மொபைல் செயலியை பயன்படுத்தி முன்பதிவு செய்து பயணிக்க வேண்டும் என்றும் அதில் பதிவிட்டுள்ளார். இந்த முன்பதிவு இதுவரை இலலாத ஒரு புதிய சாதனையாக பார்க்கப்படுகிறது.



விழுப்புரம் அருகே

# சாலை விபத்தில் உயிரிழந்த காவலரின் குடும்பத்திற்கு ரூ.25 லட்சம் நிதி உதவி

விழுப்புரம், நவ. 3–

விழுப்புரம் தமிழ்நாடு முதலமைச்சர் உத்தரவின்படி வனத்துறை அமைச்சர் பொன்முடி மாவட்ட ஆட்சித்தலைவர் பழனி தலைமையில் விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினர் லட்சுமணன் முன்னிலையில் விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி வட்டம் வாக்கூர் அருகே உள்ள எரிச்சனாம் பாளையம் கிராமத்தில் சாலை விபத்தில் உயிரிழந்த காவலரின் குடும்பத்தினை சந்தித்து நிவாரண நிதிக்கான காசோலையினை வழங்கி குடும்பத்திற்கு ஆறுதல் தெரிவித்தார்.



வனத்துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில், செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் காவல் நிலையத்தில் காவலராக பணிபுரிந்து வந்த சத்தியமூர்த்தி (27) என்பவர் கடந்த 26.10.2024 அன்று இரவு சுமார் 8மணியளவில் அரசியல் கட்சி ஒன்று நடத்திய மாநாட்டின் பாதுகாப்பு பணிக்காக இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது சென்னை திருச்சி தேசிய நெடுஞ்சாலையில், அய்யூர் அகரம் மேம் பாலத்தில், எதிர்பாராத விதமாக கார் ஒன்று மோதிய விபத்தில் பலத்த காயமடைந்து சிகிச்சைக்காக முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, மேல்சிகிச்சைக்காக சென்னை ராஜீவ்காந்தி அரசுப் பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இத்துயரச் செய்தியினை அறிந்த தமிழ்நாடு முதலமைச்சர், காவலரின் குடும்பத்திற்கு ஆறுதல் தெரிவித்ததுடன், அவரது குடும்பத்தின் எதிர் காலத்தினை கருத்திற் கொண்டு ரூ.25 லட்சம் நிவாரண நிதியாக வழங்கப் படும் என அறிவித்தார்கள்.

அதனடிப்படையில், இன்றைய தினம், எரிச்சனாம்பாளையம் கிராமத்தில் சாலை விபத்தில் உயிரிழந்த காவலரின் குடும்பத்தினரை நேரில் சந்தித்து, ரூ.25 லட்சம் நிவாரண நிதிக்கான காசோலையினை வழங்கி குடும்ப உறுப்பினர்களுக்கு ஆறுதல் தெரிவிக்கப்பட்டது. மேலும் அவரது மனைவி முதுகலை பட்டப்படிப்பான எம்.எஸ்.சி தாவரவியல் படித்துள்ளதால் கருணை அடிப்படையில் பணி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என வனத்துறை அமைச்சர் பொன்முடி தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தீபக் சிவாச் விக்கிரவாண்டி ஊராட்சி ஒன்றிய குழுத் தலைவர் சங்கீதா அரசி விழுப்புரம் வருவாய் கோட்டாட்சியர் முருகேசன் விக்கிரவாண்டி வருவாய் வட்டாட்சியர் யுவராஜ், வாக்கூர் மதுரா ஊராட்சி மன்ற தலைவர் ராமச்சந்திரன் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

# நர்சிங் பயிற்சி முடித்த மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் விழா

கிருஷ்ணகிரி, நவ. 3–

கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை திருமண மண்டபத்தில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம் மற்றும் துர்கா சக்தி பெண்களுக்கு உதவும் பெண் தொண்டு நிறுவனம் சார்பாக நர்சிங் பயிற்சி முடித்த மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் விழா நடைபெற்றது, நிகழ்ச்சிக்கு மருத்துவர் எஸ். மாலதி நாராயணசாமி, தலைவர் துர்கா சக்தி அறக்கட்டளை வரவேற்புரை ஆற்றினார். அரசு கஸ்தூரிபாய் நர்சிங் கல்லூரி (ஓய்வு) முதல்வர் ராணி சண்முகம் தலைமை வகித்தார். நிகழ்ச்சிக்கு ஊத்தங்கரை ஸ்ரீ வித்யா மந்திர் பள்ளியின் தாளாளர் சந்திரசேகரன், தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தைச் சேர்ந்த இணை இயக்குனர் பன்னீர்செல்வம், வெங்கடேஷ் ஆகியோர் சான்றிதழை வழங்கி சிறப்புரையாற்றினர். இதில் வாழ்த்துரை இந்திய ரயில்வே மேற்பார்வையாளர் சங்கத்தின் தலைவர் சண்முகம், ஊத்தங்கரை பேரூராட்சித் தலைவர் அமானுல்லா, சிஏகே பெட்ரோல் பங்க் உரிமையாளர் சந்திரன், முன்னாள் பேரூராட்சி தலைவர் பூபதி, சுப்பிரமணியம், ராஜாராம், திமுக விவசாய மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளர் சத்யநாராயணமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினர். நிறைவாக துர்கா சக்தி நர்சிங் பள்ளி பயிற்சியாளர் சரித்திரா நன்றி உரை வழங்கினார்.



# சூடுபிடிக்கும் தமிழக அரசியல் களம்: த.வெ.க. நிர்வாகிகளுடன் அவசர ஆலோசனையில் விஜய்

சென்னை, நவ. 3–

தமிழ் திரை உலகின் முன்னணி நடிகராக உள்ள விஜய் கடந்த பிப்ரவரி மாதம் தமிழக வெற்றிக் கழகம் என்ற பெயரில் புதிய கட்சியை தொடங்கினார்.

இதைத் தொடர்ந்து கடந்த 27ந்தேதி விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி வி. சாலையில் பிரமாண்டமான முறையில் தமிழக வெற்றிக்கழக மாநாட்டை நடத்திக் காட்டினார்.

இந்த மாநாட்டில் லட்சக்கணக்கான தொண்டர்கள் பங்கேற்றது தமிழக அரசியல் கட்சிகளை திரும்பி பார்க்க வைத்துள்ளது.

பாரதிய ஜனதா, தி.மு.க. ஆகிய 2 கட்சிகளும் தனது எதிரி என மாநாட்டு மேடையில் அறிவித்த விஜய் 2026ம் ஆண்டு தேர்தலில் நிச்சயம் வெற்றி பெறுவோம் என்றும் தங்களோடு கூட்டணி அமைப்பவர்களுக்கு ஆட்சி அதிகாரத்தில் பங்கு கொடுப்போம் என்றும் பேசியிருப்பது அரசியல் களத்தில் பேசு பொருளாக மாறியுள்ளது.



இது தொடர்பாக காரசாரமான விவாதங்கள் எழுந்துள்ளன. இந்த நிலையில், நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளரான சீமான் விஜய்யின் கொள்கைகளை கடுமையாக விமர்சித்து கருத்து தெரிவித்திருப்பதும் அரசியல் களத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

இது போன்ற ஒரு சூழலில் விஜய் இன்று தமிழக வெற்றிக்கழக நிர்வாகிகளுடன் அடுத்த கட்ட நடவடிக்கை பற்றி முக்கிய ஆலோசனை நடத்தினார்.

கிழக்கு கடற்கரை சாலை பனையூரில் உள்ள கட்சி அலுவலகத்தில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் பங்கேற்பதற்காக காலை 10.35 மணியளவில் விஜய் கட்சி அலுவலகத்துக்கு வருகை தந்தார். அப்போது அலுவலகத்தில் வெளியில் திரண்டிருந்த கட்சி தொண்டர்களை பார்த்து அவர் கை அசைத்தார்.

பின்னர் மாநில, மாவட்ட நிர்வாகிகள் கூட்டத்தில் விஜய் பங்கேற்றார். த.வெ.க. பொதுச்செயலாளர் புஸ்சி ஆனந்த் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

த.வெ.க. மாநாட்டை வெற்றிகரமாக நடத்திக் காட்டிய பின்னர் நடைபெற்ற முதல் கூட்டம் இதுவாகும். கட்சியில் அடுத்த கட்டமாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றி இந்த கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்படும் என கூறப்படுகிறது.

தமிழகம் முழுவதும் வருகிற 27ந்தேதி முதல் தீவிர சுற்றுப்பயணம் மேற்கொள்ள விஜய் திட்டமிட்டு இருப்பதாக தகவல்கள் வெளியாகி யுள்ளன.

அதற்கான ஏற்பாடுகளை செய்வது பற்றியும், தமிழக வெற்றி கழகத்துக்கு மாநில, மாவட்ட அளவில் நிர்வாகிகளை நியமிப்பது பற்றியும் ஆலோசனை எனவும் இப்படி பல்வேறு விஷயங்கள் பற்றி த.வெ.க. தலைவர் விஜய் இன்று ஆலோசனை நடத்துவதால் அவரது அடுத்த கட்ட நடவடிக்கை எப்படி இருக்கும்? என்பது அரசியல் களத்தில் கூடுதல் எதிர்பார்ப்பை ஏற்படுத்தி உள்ளது.

இந்த ஆலோசனை கூட்டம் முடிந்த பின்னர் தமிழக வெற்றிக் கழகம் சார்பில் முக்கிய அறிவிப்புகளை வெளியிட வாய்ப்பு இருப்பதாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளன.

# சர்வதேச பராமரிப்பாளர் தின விழா




சர்வதேச பராமரிப்பாளர் தின விழா மற்றும் உலக மனநலம் தின விழா கொண்டாடப்பட்டது. இதில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் மற்றும் நீதியரசர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள். அனைவரையும் குழந்தை தாஸ் வேல்டு நிறுவனத்தின் இயக்குநர் வரவேற்றார்.

# தடுப்பணையில் குளித்து மகிழும் சிறுவர்கள்



சிவகங்கை மாவட்டம் கல்லல் அருகேயுள்ள செவரக்கோட்டை தடுப்பணையிலிருந்து வெளியேறும் தண்ணீரில் குளித்து மகிழும் சிறுவர்கள்.

# கலைத்திருவிழா போட்டி



சிவகங்கை கற்பூர சுந்தரபாண்டியன் ராமலட்சுமி மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற கலைத்திருவிழா போட்டிகளை சிவகங்கை வட்டார கல்வி அலுவலர் பாலாமணி பார்வையிட்டு பாராட்டினார்கள்.

# தரிசு நிலங்களில் மரக்கன்றுகள் நடும் திட்டம்



தென்காசி மாவட்டம் கோவிந்த பேரி ஊராட்சியில் நடைபெற்ற தரிசு நிலங்களில் மரக்கன்றுகள் நடும் திட்டத்தை ஊராட்சி மன்ற தலைவர் டி.கே. பாண்டியன் தலைமையில் சோகோ நிறுவனர் ஸ்ரீதர் வேம்பு தொடங்கி வைத்தார். ஊராட்சி மன்ற துணைத் தலைவர் இசேந்திரன், துரைப்பாண்டியன் மாரித்துரை, கிருஷ்ணன், குமார், ஜெகநாதன், கோமு பாண்டியன் (கல்யாணி பாண்டியன்) சோகோ நிறுவன மேலாளர் கீர்த்தி வாசன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

## உயர்கல்வி நிறுவனங்களில் சேர்ந்த அரசு பள்ளி மாணவர்களுக்கு பாராட்டு



சிவகங்கை மாவட்டத்தில் பல்வேறு தேர்வுகளில் வெற்றிபெற்று உயர்கல்வி நிறுவனங்களில் சேர்ந்த அரசு பள்ளி மாணவர்களை பாராட்டிய மாவட்ட ஆட்சித் தலைவர் ஆஷா அஜித்.

# தொடர் மழையால் 63 அடியை நெருங்கும் வைகை அணை நீர்மட்டம்



கூடலூர், நவ. 3–

தேனி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதனால் அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்து நீர்மட்டமும் வேகமாக உயர்ந்து வருகிறது. நேற்றும் மேற்கு தொடர்ச்சி மலை மற்றும் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் கன மழை பெய்தது. இதனால் சாலையில் மழை நீர் பெருக்கெடுத்து ஓடியது.

மேலும் தாழ்வான பகுதிகளில் தண்ணீர் தேங்கி நின்றதால் பொது மக்கள் அவதியடைந்தனர்.

வைகை அணைக்கு தொடர்ந்து நீர்வரத்து அதிகரித்து வருவதால் கடந்த 2 நாட்களில் அணையின் நீர்மட்டம் 2 அடி உயர்ந்துள்ளது.

இன்று காலை நிலவரப்படி 62.30 அடியாக உள்ளது. நீர்வரத்து 2745 கன அடி நீர் வருகிற நிலையில் மதுரை மாநகர குடிநீருக்காக மட்டும் 69 கன அடி நீர் திறக்கப்படுகிறது. எனவே இன்று மாலைக்குள் 63 அடியை எட்டும் என எதிர்பார்க்கப் படுகிறது.

71 அடி உயரம் கொண்ட வைகை அணையின் நீர்மட்டம் மீண்டும் முழு கொள்ளளவை எட்டும் என விவசாயிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். இதனால் விவசாய பணிகளில் மும்முரமாக இறங்கியுள்ளனர்.

முல்லைப்பெரியாறு அணை நீர் மட்டம் 124.30 அடியாக உள்ளது. அணைக்கு 3402 கன அடி நீர் வருகிறது. அணையில் இருந்து தமிழக பகுதிக்கு 1100 கன அடி நீர் திறக்கப்படுகிறது. 3479 மி. கன அடி நீர் இருப்பு உள்ளது. மஞ்சளாறு அணையின் நீர்மட்டம் 55 அடியில் நீடித்து வருகிறது. இதனால் அணைக்கு வரும் 100 கன அடி நீர் அப்படியே திறக்கப்படுகிறது. சோத்துப் பாறை அணையின் நீர்மட்டம் 126.28 அடியாக உள்ளது. அணைக்கு வரும் 534.70 கன அடி நீர் அப் படியே திறக்கப்படுகிறது.

ஆண்டிபட்டி 20, அரண்மனைப்புதூர் 0.4, பெரியகுளம் 52, மஞ்சளாறு 10, சோத்துப்பாறை 123.2, வைகை அணை 2.2, போடி 33.4, உத்தமபாளையம் 5.6, பெரியாறு அணை 72.8, தேக்கடி 60.4, சண்முகாநதி 10.6 மி.மீ மழை அளவு பதிவாகியுள்ளது.

# 2026 சட்டமன்ற தேர்தலில் வாரிசு அரசியலுக்கு முற்றுப்புள்ளி எடப்பாடி பழனிசாமி பரபரப்பு பேச்சு

சேலம், நவ.3–

எடப்பாடி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட எடப்பாடி வீரப்பம் பாளையம் பகுதியில் எடப்பாடி நகர அ.தி.மு.க சார்பில் செயல் வீரர்கள், செயல் வீராங்கனைகள் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், தமிழக சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவரும், முன்னாள் முதலமைச்சருமான எடப்பாடி பழனிசாமி தலைமை தாங்கி பேசியதாவது:



சேலம் மாவட்டத்தில் மொத்தம் 11 சட்டமன்ற தொகுதிகள் உள்ளன. கடந்த சட்டமன்ற தேர்தலில் சேலம் மாவட்டத்தில் 8 தொகுதிகளில் அ.தி.மு.க. வேட்பாளர்கள் வெற்றி பெற்றார்கள். 2 தொகுதிகளில் கூட்டணி கட்சி வேட்பாளர்கள் வெற்றி பெற்றார்கள். 11 சட்டமன்ற தொகுதியில் 10 இடங்களில் வென்றது அ.தி.மு.க கூட்டணி. சேலம் மாவட்டம் எடப்பாடி சட்டமன்ற தொகுதியில் அ.தி.மு.க. அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

தி.மு.க.வில் உழைத்தவர்கள் யாருக்கும் மரியாதை கிடையாது. தி.மு.க.வில் ஜனநாயகம் குழி தோண்டி புதைக்கப்பட்டுள்ளது.

தி.மு.க. கட்சியை வளர்த்தவர்கள், மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டவர்கள், மூத்த அமைச்சர்கள் எல்லோரையும் ஒதுக்கிவிட்டு கருணாநிதி குடும்பத்தில் பிறந்த மு.க.ஸ்டாலின் மகனான உதயநிதியை இன்றைக்கு துணை முதலமைச்சராக்கி இருக்கின்றீர்கள் என்றால் அங்கு சர்வாதிகாரம் தலைதூக்கி இருக்கின்றது.

மு.க.ஸ்டாலின் முதலமைச்சராக இருக்கின்றார். அடுத்தது உதயநிதி இளவரசராக இருக்கின்றார். அவர் முதலமைச்சர் என்கிற ஸ்டாலினுடைய கனவு ஒருபோதும் தமிழகத்தில் பலிக்காது.

தி.மு.க.வில் கருணாநிதி தலைவராக இருக்கும்போது ஸ்டாலினை வளர்த்துவதற்கு கட்சியில் பல்வேறு முயற்சிகள் எடுத்தார். 20 ஆண்டு காலம் ஸ்டாலின் அந்த கட்சிக்காக உழைத்தார். இதை இல்லை என்று நாங்கள் மறுக்கவில்லை. அவர் எம்.எல்.ஏ.வாக இருந்தார். மேயராக இருந்தார். எதிர்கட்சி தலைவராக இருந்தார். அப்புறம்தான் முதலமைச்சராக பதவி வகித்துள்ளார். இதற்கு 20 ஆண்டு காலம் தேவைப்பட்டது. ஆனால் கட்சிக்காக பாடுபடாமல் தி.மு.க. என்கிற அடையாளம் வைத்துக் கொண்டு, கருணாநிதி குடும்பம் என்கிற அடையாளம் வைத்துக் கொண்டு உதயநிதிக்கு துணை முதலமைச்சர் என பட்டாபிஷேகம் செய்திருக்கிறார்கள்.

ஏற்கனவே இந்தியாவிலேயே மன்னராட்சி ஒழிக்கப்பட்டு விட்டது. இனி தமிழகத்தில் மன்னராட்சி என்பது ஒருபோதும் எடுபடாது. அதற்கு மக்களும் அனுமதிக்க மாட்டாங்க.

குடும்ப கட்சியாக மாறிவிட்டது தி.மு.க., வருகின்ற 2026 சட்டமன்ற தேர்தல் வாரிசு அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைக்கின்ற தேர்தலாக அமையும் ஸ்டாலின் அவர்களே. நீங்கள் எவ்வளவோ முயற்சி பண்ணுகிறீங்க. தன்னுடைய மகனை பல்வேறு நிகழ்சிகளில் கலந்து கொள்ள வைத்து மக்களிடத்திலே ஈர்ப்பு சக்தி உண்டாக்க வேண்டும் என்பதற்கு முயற்சி செய்கிறீங்க. எந்த ஒரு முயற்சியும் எடுபடாது.

மக்களை ஒருபோதும் ஏமாற்ற முடியாது. தமிழ்நாட்டை பொறுத்தவரையும் விழிப்புணர்வு கொண்ட மக்கள். 2011க்கு பிறகு 2021 வரை அதி.மு.க. ஆட்சியில் தமிழ்நாடு எப்படி இருந்தது என சற்று நினைத்து பாருங்கள்.

எடப்பாடி தொகுதி என்று சொன்னால் தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் எடப்பாடியிலேயே இருக்கின்றார் என்கிற ஒரு அடையாளத்தை இன்றைக்கு தமிழக மக்கள் கொடுத்து இருக்கிறார்கள்.

10 ஆண்டுகாலம் சிறப்பான ஆட்சியை கொடுத்த அரசாங்கம் அ.தி.மு.க. அரசாங்கம் என்பதை நாங்கள் நிரூபித்து காட்டினோம்.

தி.மு.க. ஆட்சியில் எதிர்கட்சி சொல்வதை காது கொடுத்து கேட்பது கிடையாது. தி.முக. ஸ்டாலின் ஆட்சியில் தாலிக்கு தங்கம், திருமண உதவி தொகை நிறுத்தப்பட்டு விட்டது. அ.தி.மு.க.வை உடைக்க வேண்டும் என எவ்வளவோ சூழ்ச்சி செய்தாங்க. ஆனால் நடக்கவில்லை. இவ்வாறு அவர் பேசினார்.

# காவிரி நீர்பிடிப்பு பகுதியில் கனமழை ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து அதிகரிப்பு



ஒகேனக்கல், நவ. 3–

தமிழகத்தின் முக்கிய சுற்றுலாத் தலமான ஒகேனக்கல்லுக்கு கர்நாடகம், ஆந்திரா, கேரளா உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் இருந்தும் சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இருந்தும் தினமும் ஏராளமான சுற்றுலா பயணிகள் வந்து செல்வார்கள். அவர்கள் அருவியில் குளித்தும், பரிசலில் சென்றும் மகிழ்ந்து செல்வர்.

இதனிடையே தமிழக காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளான தேன்கனிக்கோட்டை, அஞ்செட்டி, பிலிகுண்டுலு, ராசிமணல் உள்ளிட்ட இடங்களில் நேற்று இரவு கனமழை பெய்தது.

இதனால் 6,500 கன அடியாக இருந்த நீர்வரத்து இன்று காலை 8 மணி நிலவரப்படி நீர்வரத்து வினாடிக்கு 14 ஆயிரம் கனஅடியாக அதிகரித்தது.

விடுமுறை தினமான இன்று ஒகேனக்கல்லில் சுற்றுலா பயணிகள் குவிந்தனர்.

முதலைப் பண்ணை, சிறுவர் பூங்கா உள்ளிட்ட பகுதிகளை சுற்றி பார்த்தனர். சுற்றுலா பயணிகள் குடும்பத்தினருடன் பரிசல் பயணம் மேற்கொண்டு காவிரி ஆற்றின் அழகை ரசித்தனர்.

பின்னர் அவர்கள் தொங்கு பாலத்தில் நின்றவாறு காவிரி ஆற்றை கண்டு ரசித்தனர். இளைஞர்கள் எண்ணெய் மசாஜ் செய்து மெயின் அருவியில் குளித்தும், பெண்கள் காவிரி ஆற்றில் குளித்தும் மகிழ்ந்தனர். குடும்பத்துடன் பூங்காவில் அமர்ந்து மீன் குழம்புடன் உணவு உண்டு மகிழ்ந்தனர். சாலையோரம் இருந்த கடைகளில் பொறித்து வைத்த மீன்களையும் ஆர்வமுடன் வாங்கி சாப்பிட்டனர்.

ஒகேனக்கல்லில் சுற்றுலா பயணிகள் குவிந்ததால் நடைபாதை, பஸ் நிலையம் உள்ளிட்ட பகுதிகளில் எங்கு பார்த்தாலும் மக்கள் கூட்டமாகவே காணப்பட்டது.

இதனால் மசாஜ் தொழிலாளர்கள், மீன் சமையலா[illegible]கள், பரிசல் ஓட்டிகள் உள்ளிட்ட தொழிலாளர்கள், வியாபாரிகள் மகிழ்ச்சியுடன் உள்ளனர்.

நீர்வரத்தை பிலிகுண்டுலுவில் உள்ள மத்திய நீர்வளத்துறை அதிகாரிகள் கண்காணித்து வருகின்றனர்.

# சுவாமிமலையில் அரிமா சங்கம் சார்பில் 9ம் ஆண்டு மாபெரும் ரத்ததான முகாம்



சுவாமிமலை, நவ. 3–

சுவாமிமலையில் உள்ள எம்.எல்.ஏ நர்சரி பிரைமரி பள்ளி மற்றும் சுவாமிமலை லயன்ஸ் சங்கம், குடந்தை ரத்த தானம் டிரஸ்ட் இணைந்து நடத்தும் 9ம் ஆண்டு மாபெரும் ரத்த தான முகாம் எம்.எல்.ஏ நர்சரி பிரைமரி பள்ளியில் நடைபெற்றது.

இம்முகாமில் எம்.எல்.ஏ பள்ளியின் தாளாளர் அப்துல் மாலிக், செயலாளர் முஹமத் தலைமை வகித்தனர். இதில் சுவாமிமலை லயன்ஸ் சங்கத் தலைவர் மிராசிவசங்கரன், செயலர்கள் செந்தில்குமார், வெங்கடேசன், பொருளாளர் துரை, இவாஸ் சங்கத் தலைவர் ஜாகிர் உசேன், முஹம்மது இத்ரிஸ், மருத்துவர்கள் இர்ஃபான், சஃபான், பக்கீர் முஹம்மத், மன்சூர், பக்ருதீன் மற்றும் குடந்தை ரத்ததான டிரஸ்ட் அறங்காவலர் கராத்தே பஷீர் ஆகியோர் கலந்துகொண்டு ரத்ததான முகாமில் ரத்த தானம் வழங்கியவர்களுக்கு சான்றிதழ் வழங்கி சிறப்புரையாற்றினர். இம்முகாமில் 50க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டு ரத்ததானம் வழங்கினர்.

# எம்.பி.பி.எஸ்., ஆயுர்வேதம் சிறப்பு கவுன்சிலிங் மாணவர்கள் பட்டியல் வெளியீடு

புதுச்சேரி, நவ. 3–

எம்.பி.பி.எஸ்., பல் மருத்துவம், ஆயுர்வேதம், கால்நடை படிப்புகளுக்கு சிறப்பு கவுன்சிலிங் நடத்தி வரைவு பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

இதுகுறித்து சென்டாக் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது, அரசு ஒதுக்கீட்டினை பொருத்தவரையில் மாகி ராஜீவ் காந்தி ஆயுர்வேத கல்லூரியில் 3, மாகி பல் மருத்துவக் கல்லூரியில் 7 மாணவர்களுக்கும், வெங்கடேஸ்வரா பல் மருத்துவக் கல்லூரியில் மூன்று மாணவர்களுக்கும் சீட் ஒதுக்கப்பட்டுள்ளது.

நிர்வாக இடங்களை பொருத்தவரை மாகி ராஜீவ் காந்தி ஆயுர்வேத கல்லூரியில் 3, மகாத்மா காந்தி பல் மருத்துவக் கல்லூரியில் 8, மாகி பல் மருத்துவக் கல்லூரியில் 25, வெங்கடேஸ்வரா பல் மருத்துவக் கல்லூரியில் 9 பேருக்கு சீட் ஒதுக்கப்பட்டுள்ளது.

எம்.பி.பி.எஸ்., நிர்வாக இடங்களை பொருத்தவரை அரசு மருத்துவக் கல்லூரியில் ஒரு மாணவிக்கு சீட்டு ஒதுக்கப்பட்டுள்ளது. பிம்ஸ் 3, மணக்குள விநாயகர் 19, வெங்கடேஸ்வரா 31 பேருக்கு சீட் ஒதுக்கப் பட்டுள்ளது. கால்நடை படிப்பு நிர்வாக இடங்களை பொருத்தவரை ராஜீவ் காந்தி கால்நடை மருத்துவக் கல்லூரியில் இரண்டு மாணவர்களுக்கு சீட் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. என்.ஆர்.ஐ., சீட்டுகளை பொருத்தவரை அரசு மருத்துவக் கல்லூரி 1, பிம்ஸ் 1, மணக்குள விநாயகர் 12, வெங்கடேஸ்வரா 3 பேருக்கு சீட் ஒதுக்கப்பட்டுள்ளது. சீட் கிடைத்த மாணவர்கள் இன்று முதல் 5ம் தேதி மாலை 5 மணிக்குள் அந்தந்த கல்லூரிகளில் அசல் சான்றிதழ்களை சமர்ப்பித்து சேர வேண்டும் என, சென்டாக் அறிவுறுத்தியுள்ளது.

# குடும்பத் தகராறில் பெட்ரோல் ஊற்றி பெண் தீக்குளித்து தற்கொலை

சென்னை, நவ. 3–

சென்னை வளசரவாக்கம் அடுத்த ராமாபுரம் பகுதியை சேர்ந்தவர் மணிகண்டன். இவரது மனைவி பிரியங்கா (35 வயது). தனியார் நிறுவனத்தில் காவலாளியாக பணிபுரிந்து வந்தார். இவர்களுக்கு ஒரு மகன், ஒரு மகள் உள்ளனர்.

இந்த நிலையில் கணவன், மனைவி இடையே ஏற்பட்ட தகராறில் விரக்தி அடைந்த பிரியங்கா, உடலில் பெட்ரோல் ஊற்றி தீக்குளித்தார்.

இதில் படுகாயம் அடைந்த அவர், கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்

# உள்துறை அமைச்சருடன் சட்டம் ஒழுங்கு எஸ்.எஸ்.பி., சந்திப்பு



புதுச்சேரி சட்டம் ஒழுங்கு முதுநிலை காவல் கண்காணிப்பாளராக பதவி ஏற்றுக் கொண்டுள்ள கலைவாணன், உள்துறை அமைச்சர் நமச்சிவாயத்திற்கு பொன்னாடை போர்த்தி மரியாதை நிமித்தமாக சந்தித்தார்.

# செல்போன், சைக்கிள் கடையில் தீ விபத்து ரூ.5 லட்சம் பொருட்கள் எரிந்து சேதம்





**செஞ்சி, நவ. 3-**

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி காந்தி பஜார் அன்னை அஞ்சுகம் அம்மாள் பேருந்து நிலையம் எதிரே கலீல் என்பவருக்கு சொந்தமான இரண்டு தளங்கள் கொண்ட மொபைல் போன் மற்றும் சிறார் மிதிவண்டி கடை இயங்கி வருகிறது. செஞ்சி காந்தி பஜார் வீதி என்பதால் எப்பவும் கூட்டமாகவே காணப்படும், சம்பவத்தின் போது கடை உரிமையாளர், ஊழியர்கள் மற்றும் வாடிக்கையாளர்களுடன் தரைதளத்தில் விற்பனையில் ஈடுபட்டிருந்தபோது, இரவு சுமார் 7.45 மணியளவில் முதல் தளத்தில் திடீர் தீ ஏற்பட்டு தீயுடன் புகை வெளிப்பட்டதை கண்ட பொதுமக்கள் கடை உரிமையாளர் மற்றும் தீயணைப்புத் துறையினருக்கு தகவல் தெரிவித்தனர். சில நொடிகளில் தீ முழுவதும் பரவி கொழுந்து விட்டு எறிய தொடங்கியது.

இந்த சம்பவம் குறித்து தகவல் அறிந்த தீயணைப்பு துறை விழுப்புரம் உதவி மாவட்ட அலுவலர் ஜெய்சங்கர் தலைமையிலான செஞ்சி சிறப்பு நிலைய அலுவலர் ராதாகிருஷ்ணன் மற்றும் குழுவினர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து இரண்டு தீயணைப்பு வாகனங்கள் மூலம் கொழுந்து விட்டு எரிந்த தீயினை தண்ணீர் பீச்சி அடித்து தீயை கட்டுக்குள் கொண்டு வந்து, தீயை முற்றிலுமாக அணைத்தனர். இதனால் தரைத்தளம், இரண்டாம் தளம் மற்றும் அருகில் உள்ள கடைகளுக்கு தீ பரவாமல் தடுக்கப்பட்டது.

இதில் அந்த தளத்தில் இருந்த மொபைல் போன் உதிரி பாகங்கள், சிறார்களுக்கான 150க்கும் மேற்பட்ட மிதிவண்டிகள் மற்றும் அதற்கான உதிரி பாகங்கள், பெண்களுக்கான கைப்பைகள் என சுமார் 5 லட்சம் மதிப்பிலான பொருட்கள் முற்றிலும் கருகியது. மேலும் தீ வெப்பத்தின் காரணமாக கான்கிரீட்கள் பெயர்ந்து விழுந்தது சேதமடைந்தது. தீ விபத்து குறித்து செஞ்சி காவல் துறையினர் தீ மின் கசிவால் ஏற்பட்டதா அல்லது வேறு ஏதேனும் காரணங்களா என்று விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். இந்த சம்பவத்தால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

# காங்கிரஸ் கட்சி செயல்வீரர்கள் கூட்டம்




**கும்பகோணம், நவ. 3-**

தஞ்சை வடக்கு மாவட்ட காங்கிரஸ் செயல் வீரர்கள் கூட்டம் கும்பகோணம் ராயா ஹோட்டலில் மாவட்ட காங்கிரஸ் தலைவர் டி ஆர் லோகநாதன் தலைமையில் நடைபெற்றது. வட்டார தலைவர்கள் மணிகண்டன், சிவஞானம், சுந்தர் ராஜன், மணிசங்கர், தண்டாளம் சரவணன், மாநில பொதுக்குழு உறுப்பினர் பால தண்டாயுதம், யூமாயூன்கபிர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சியில் மாநகர காங்கிரஸ் தலைவர் மிர்ஸாதின், மாநகர மேயர் சரவணன், மாநில பொதுக்குழு உறுப்பினர் மாநகர பொருளாளரும் தியாகராஜன், வண்டுவஞ்சேரி அசோகன், ராஜலிங்கம், சபில்ரஹமன், மாவட்ட காங்கிரஸ் பொருளாளர் பாபநாசம், நகர தலைவர் பாலாஜி ராஜ், திருஞான சம்பந்தம், கண்ணன், பக்கிரி சாமி, வாண்டையார் டி கே வி சேகர், நவநீதன், அமைப்பு சாரா தலைவர் முருகன், வழக்கறிஞர் செந்தில் குமார், ஐஎன்டிசி கார்த்தி, மாரியப்பன், தேவதாஸ் ,ஏசு தாஸ், மாவீரன், மாரியப்பன், பிரபாகரன், நாராயண், சத்யா, தர்பார், சாதிக், பழநி, சின்னதுரை, இன்ப ராஜ், காசிநாதன், ஜாகிர், உசேன், வெங்கட்ராமன் மற்றும் சீனுவாசன், தாஸ், மணி ராஜ், விஜயகுமார், பிரேம்குமார், கே.ஆர் பாலன் சேகர், சாமிநாதன், விஜயகுமார், கரிகாலன், டிஸ்கோ செல்வராஜ், சுரேஸ், மாநகர மகிளா காங்கிரஸ் தலைவர் செல்வி மகேஸ்வரி, உமா, விமலா, வளர்மதி, லதா, விக்டோரியா மற்றும் பலர் கலந்துகொண்டனர். கூட்டத்தில் பல்வேறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கும்பகோணம் சட்டமன்ற தொகுதி காங்கிரஸ் தலைவர் சேகர் நன்றி கூறினார்.

தஞ்சை வடக்கு மாவட்ட காங்கிரஸ் செயல் வீரர்கள் கூட்டம் – மாவட்ட காங்கிரஸ் தலைவர் டி ஆர் லோகநாதன் பிறந்த நாள் விழா நடைபெற்றது. பிறந்த நாள் நிகழ்ச்சியில் மாநிலங்களவை உறுப்பினர் கல்யாண சுந்தரம், முன்னாள் மக்களவை உறுப்பினர் செ. ராமலிங்கம், அனைத்து கட்சி நண்பர்கள் கலந்துகொண்டு வாழ்த்துக்கள் தெரிவித்தனர்.

# மேட்டுப்பாளையம்-உதகை மலை ரெயில் சேவை இன்று ரத்து



**நீலகிரி, நவ. 3-**

தென் தமிழக கடலோரப் பகுதிகள் மற்றும் அதனையொட்டிய பகுதிகளில் நிலவும் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக தமிழ்நாட்டின் கடலோர மாவட்டங்கள், தென் மாவட்டங்களில் அனேக இடங்களிலும், வட தமிழகத்தின் உள் மாவட்டங்களில் சில இடங்களிலும், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும் மழை பெய்துள்ளது. அதன் தொடர்ச்சியாக மேலும் தமிழ்நாட்டில் சில பகுதிகளுக்கு மழைக்கான வாய்ப்பு இருப்பதாக வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

இதனிடையே கடந்த சில நாட்களாக மேட்டுப்பாளையம் மற்றும் நீலகிரியின் மலை சார்ந்த பகுதிகளில் கனமழை பெய்து வருகிறது. இந்நிலையில், மலை ரெயில் செல்லும் தண்டவாள பாதை மீது மண் சரிவு ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் மழை காரணமாக மலை ரெயில் பாதையின் பல இடங்களில் பாறை மற்றும் மண் சரிவு ஏற்பட்டுள்ளதால் இன்று ஒருநாள் மலை ரெயில் சேவை ரத்து செய்யப்படுவதாக சேலம் ரெயில்வே கோட்டம் அறிவித்துள்ளது.

இதன்படி இன்று (3.11.2024) மேட்டுப்பாளையம் முதல் உதகை வரையிலான ஊட்டி மலை ரெயில் சேவை ரத்து செய்யப்பட்டு, ரெயில் பாதையை சீரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும் என ரெயில்வே நிர்வாகம் அறிவித்துள்ளது.

# சவூதி அரேபியாவில் 4 ஆயிரம் ஆண்டு பழமையான நகரம் கண்டுபிடிப்பு



**புதுடெல்லி, நவ. 3-**

சவூதி அரேபியாவில் 4 ஆயிரம் ஆண்டுகள் பழமையான நகரத்தை தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். வடமேற்கு சவூதி அரேபியாவில் பழமையான கோட்டை நகரத்தின் எச்சங்கள், பிரெஞ்சு தொல்பொருள் ஆராய்ச்சியாளர் குய்லூம் சார்லக்ஸ் மற்றும் அவரது குழுவினரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதில் 14.5 கிலோமீட்டருக்கு சுவர் இருந்தது.

அல் நதாஹ் என்று அழைக்கப்படும் இடம், வறண்ட பாலைவனத்தால் சூழப்பட்ட பசுமையான பகுதியில் நீண்ட காலமாக மறைந்து இருந்ததாக தெரிவித்தனர். இதுகுறித்து பேசிய ஆராய்ச்சியாளர்கள், "இந்த நகரம் ஆரம்பகால வெண்கல யுகத்தின் கிமு 2400க்கு முந்தையது. இந்நகரத்தில் 500 பேர் வரை வாழ்ந்திருக்கலாம். இந்த முக்கியமான கண்டுபிடிப்பு பண்டைய மக்கள் நாடோடிகளிலிருந்து நகர்ப்புற வாழ்க்கை முறைக்கு எவ்வாறு மாறியது என்பதை எடுத்துக்காட்டுகிறது. இது பிராந்தியத்தின் வரலாற்று நிலப்பரப்பில் அதன் முக்கியத்துவத்தை வெளிகாட்டுகிறது. அக்கால சமூக மற்றும் கட்டிடக்கலை வளர்ச்சிகள் பற்றிய நமது புரிதலை மேம்படுத்துவது மட்டுமல்லாமல், அரேபிய தீபகற்பத்தின் இந்த பகுதியில் நகரமயமாக்கலை நோக்கிய முக்கிய மாற்றத்தை வலியுறுத்துகிறது. குடியிருப்புகள் ஒரு நிலையான திட்டத்தைப் பின்பற்றி கட்டப்பட்டன மற்றும் சிறிய தெருக்களால் இணைக்கப்பட்டன. வெண்கல யுகத்தில் வடமேற்கு அரேபியாவில் பெரும்பாலும் ஆயர் நாடோடி குழுக்கள் ஆதிக்கம் செலுத்தினர். நீண்ட தூர வர்த்தகத்துக்காக ஒருங்கிணைக்கப்பட்ட சிறிய கோட்டைகளை மையமாகக் கொண்டு ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட நினைவுச் சின்ன சுவர் அங்கு உள்ளன" என்று தெரிவித்தனர்.

# வடகொரியாவுக்கு அடுத்து நீங்கதான் ஆபத்து இந்தியாவை 'சைபர்' எதிரியாக அறிவித்த கனடா

**புதுடெல்லி, நவ. 3-**

கனடாவைச் சேர்ந்த சீக்கிய பிரிவினைவாத தலைவர் ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கடந்த ஆண்டு பிரிட்டிஷ் கொலம்பியாவில் கொல்லப்பட்டார். இந்தக் கொலையில் இந்திய அரசுக்கு தொடர்பு உள்ளதாக கனடா குற்றம்சாட்டி வருகிறது. இந்த விவகாரம் தொடர்பாக இரு நாடுகளுக்கும் இடையே மோதல் வெடித்தது. இருநாட்டு தலைவர்களும் தூதர்களை வெளியேற்றினர்.

இதற்கிடையே, கனடாவில் சீக்கிய பிரிவினைவாதிகளைக் குறிவைத்து வன்முறை, மிரட்டல் மற்றும் உளவுத்தகவல்கள் சேகரிப்பு போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள இந்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா உத்தரவிட்டதாகக் கனடா வெளியுறவுத்துறை துணை அமைச்சர் டேவிட் மாரிசன் குற்றம்சாட்டினார். இதை கண்டித்து மாரிசனுக்கு எதிராக இந்தியா சம்மன் அனுப்பியது.

மேலும் இந்திய அதிகாரிகளைக் கனடா அரசு உளவு பார்த்தாக மத்திய அரசு நேற்றைய தினம் புதிய குற்றச்சாட்டு ஒன்றை முன்வைத்துள்ளது. ஆடியோ மற்றும் வீடியோ மூலம் கனேடிய அரசால் இந்திய தூதரக அதிகாரிகள் உளவு பார்க்கப்பட்டதாக இந்திய வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் ரந்தீர் ஜெய்ஸ்வால் தெரிவித்துள்ளார்.இந்த குற்றச்சாட்டுக்கு பதிலளித்த கனடா, தங்களின் பாதுகாப்பாகவே அவர்கள் கண்காணிக்கப்பட்டதாகத் தெரிவித்துள்ளது.

மேலும் இந்தியாவை சைபர் எதிரியாகவும் கனடா அறிவித்துள்ளது. தற்போது வெளியிடப்பட்டுள்ள கனடா தேசிய சைபர் அச்சுறுத்தல் மதிப்பீடு 20252026 அறிக்கையில், தங்கள் நாட்டின் இணைய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருக்கும் எதிரி நாடுகளின் பட்டியலில், சீனா, ரஷ்யா, ஈரான், வடகொரியா ஆகிய நாடுகளுக்குப் பிறகு ஐந்தாவது நாடாக இந்தியாவின் பெயரை சேர்த்துள்ளது. இந்த அறிக்கையானது கனேடிய இணைய பாதுகாப்பிற்கான தேசிய தொழில்நுட்ப மையம் வெளியிட்டுள்ளது.

தினமும் மாலையில் மாலை எக்ஸ்பிரஸ் படியுங்கள்

# 3-வது டெஸ்ட்: முன்னணி வீரர்கள் மீண்டும் சொதப்பல்: அஜாஸ் சுழலில் தடுமாறும் இந்தியா




**மும்பை, நவ. 3-**

இந்தியா நியூசிலாந்து அணிகள் இடையிலான 3வது மற்றும் கடைசி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி மும்பை வான்கடே ஸ்டேடியத்தில் நடைபெற்று வருகிறது. இந்த ஆட்டத்திற்கான டாஸ் வென்ற நியூசிலாந்து அணியின் கேப்டன் டாம் லாதம் பேட்டிங் தேர்வு செய்தார்.

அதன்படி முதலில் பேட் செய்த நியூசிலாந்து முதல் இன்னிங்சில் 235 ரன்கள் எடுத்து ஆல்அவுட் ஆனது. இந்தியா தரப்பில் ரவீந்திர ஜடேஜா 5 விக்கெட்டும், வாஷிங்டன் சுந்தர் 4 விக்கெட்டும் வீழ்த்தினர். பின்னர் முதல் இன்னிங்சை தொடங்கிய இந்தியா 59.4 ஓவர்களில் 263 ரன்கள் குவித்த நிலையில் ஆல் அவுட் ஆனது. இந்தியா தரப்பில் அதிகபட்சமாக சுப்மன் கில் 90 ரன்கள் எடுத்தார். நியூசிலாந்து தரப்பில் அதிகபட்சமாக அஜாஸ் படேல் 5 விக்கெட்டுகள் வீழ்த்தினார்.

இதனையடுத்து 28 ரன்கள் பின்தங்கிய நிலையில் 2வது இன்னிங்சை தொடங்கிய நியூசிலாந்து 174 ரன்களில் ஆல் அவுட் ஆனது. நியூசிலாந்து தரப்பில் அதிகபட்சமாக வில் யங் 51 ரன்கள் எடுத்தார். இந்தியா தரப்பில் அபாரமாக பந்துவீசிய ரவீந்திர ஜடேஜா 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார். இதன் மூலம் இந்திய அணிக்கு 147 ரன்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

147 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி களமிறங்கிய இந்திய அணிக்கு, நியூசிலாந்து சுழற்பந்து வீச்சாளரான அஜாஸ் படேல் கடும் நெருக்கடி கொடுத்து வருகிறார். இந்த தொடரில் தொடர்ந்து சொதப்பி வரும் முன்னணி வீரர்களான ரோகித் சர்மா (11 ரன்கள்) மற்றும் விராட் கோலி (1 ரன்) இந்த முறையும் ஏமாற்றினர். மேலும் இளம் வீரர்களான ஜெய்ஸ்வால் 5 ரன்களிலும், கில் மற்றும் சர்பராஸ் கான் தலா 1 ரன்னிலும் வரிசையாக ஆட்டமிழந்தனர்.

ஒருபுறம் விக்கெட் சரிந்தாலும் மறுமுனையில் ரிஷப் பண்ட் அதிரடியாக விளையாடி இந்திய அணியின் வெற்றிக்காக தனி ஆளாக போராடி வருகிறார். அவருக்கு மறுமுனையிலிருந்து இதுவரை ஒத்துழைப்பு கிடைக்கவில்லை. இந்திய அணி தற்போது வரை 6 விக்கெட்டுகளை இழந்து 92 ரன்கள் அடித்துள்ளது. பண்ட் 53 ரன்களுடனும், வாஷிங்டன் சுந்தர் 6 ரன்களுடனும் களத்தில் உள்ளனர். நியூசிலாந்து தரப்பில் அஜாஸ் படேல் 4 விக்கெட்டுகள் வீழ்த்தியுள்ளார். இந்திய அணி வெற்றி பெற இன்னும் 66 ரன்கள் தேவைப்படும் நிலையில், 4 விக்கெட்டுகள் மீதமுள்ளன.

இதனால் இந்த டெஸ்ட் அனைவரது மத்தியிலும் எதிர்பார்ப்பை உண்டாக்கியுள்ளது.

OWNER Dr.K.SAKTHIVEL. M.B.A., Ph.D., M.A., M.phil., (JMC) PRINTER I. MANOHARAN, PUBLISHER Dr.K.SAKTHIVEL PUBLISHED FROM No.159, First Floor, Mission St, Puducherry - 605 001 AND PRINTED FROM SENTHIL ANDAVAR OFFSET PRINTERS, No.5, THENGAITITTU ROAD, MUDALIYARPET, PUDUCHERRY - 605 005 . EDITOR Dr.K. SAKTHIVEL E-mail:maalaiexpresspdy@gmail.com Ph : 0413-2226989, 9842335007



# இந்த மாதம் இறுதியில் தமிழக சட்டசபை கூடுகிறது

# பிரியங்கா காந்தி வயநாடு வருகை



# சென்னை விமான நிலையத்திற்கு மீண்டும் வெடிகுண்டு மிரட்டல்


# மாலை எக்ஸ்பிரஸ்



Email: maalaiexpresspdy@gmail.com



• 3-11-2024 ஞாயிற்றுக்கிழமை • வெளியூர்: 4-11-2024 திங்கள்கிழமை • பக்கம் 4 • ரூ.600 காசுகள்